TAHDCO

**தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ)**

எண்.31, செனடாப் ரோடு, 2வது சந்து, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.

E-Mail: tahdcoheadoffice@gmail.com Ph: 044 - 24310221

www.tahdco.com tahdco tahdco tahdco tahdcoofficial


TAHDCO

கலைஞர் 100 1924 - 2023

தமிழ்நாடு ஆதி திராவிடர் மற்றும்
பழங்குடியினர் நலத்துறை

# முதல்வர்
## தலைமையில் வெற்றிப்பாதையில் மலரும் இலட்சிய கனவுகளை மெய்யாக்கினோம்!





விளிம்பு நிலை
மக்களின் நிலைகளை
உறுதியாய் உயர்த்துவோம்.

# பொருளடக்கம்

## வெற்றிக்கதைகள்


1 தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் ........ 1 - 57

2 பழங்குடியினர் நலத்துறை ........ 59 - 83

3 ஆதிதிராவிடர் நலத்துறை ........ 85 - 127






# தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ)

ஆதிதிராவிட மக்களுக்கு அரசின் சார்பில் வீடுகளை கட்டிக் கொடுக்கும் நிறுவனமாக 1974-ஆம் ஆண்டில் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) தொடங்கப்பட்டது. சமூகத்தின் அடித்தட்டு நிலையில் உள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் பொருளாதார ரீதியில் மேம்படச் செய்யும் வகையில் பல்வேறுபட்ட தொழில் முனைவு மற்றும் திறன் மேம்பாட்டிற்கான அரசின் திட்டங்களை செயல்படுத்திடும் நிறுவனமாக தாட்கோ செயல்பட்டு வருகின்றது.

இக்கழகத்தின் தற்போது அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் **ரூ.200.00 கோடியும்,** செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் **ரூ.147.11 கோடியாக** உள்ளது. இக்கழகத்தின் செலுத்தப்பட்ட மூலதனம் 1980-ஆம் ஆண்டிலிருந்து மாநில அரசு 51 சதவீதம், ஒன்றிய அரசு 49 சதவீதம் என்கின்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்ளப்படுகிறது.

## தாட்கோவின் நடவடிக்கைகள்

- பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்துதல்
- இளைஞர்களுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்குதல்
- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையில் கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளுதல்

## பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள்

விவசாயம், சிறுதொழில், வணிகம் மற்றும் போக்குவரத்து ஆகிய துறைகளில்
தொழில் புரிந்து பொருளீட்டும் வகையில் மானியமாக வழங்கப்படுகிறது:
ஆதிதிராவிடர் மக்களுக்கு திட்டத் தொகையில் 30% அல்லது அதிகபட்சம் ரூ.2.25 இலட்சம்
பழங்குடியினருக்கு திட்டத் தொகையில் 50% அல்லது அதிகபட்சம் ரூ.3.75 இலட்சம்
இலகுரக வாகனம் வாங்கிட ரூ.4.00 இலட்சம் வரையில்
கனரக வாகனம் வாங்கிட ரூ.5.50 இலட்சம் வரையில்

- தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம்
- இளைஞர்களுக்கான சுயவேலை வாய்ப்புத் திட்டம்
- இளைஞர்களுக்கான மருத்துவம் சார்ந்த வேலைவாய்ப்புத் திட்டம்
- சுயஉதவி குழுக்களுக்கான பொருளாதார கடனுதவித் திட்டம்
- நிலம் வாங்கும் திட்டம்
- நில மேம்பாட்டுத் திட்டம்
- துரித மின் இணைப்புத் திட்டம்
- PVC குழாய்கள் வாங்கும் திட்டம்
- மகளிர் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கம் அமைத்தல்
- தீவனப்புல் வளர்க்க விதைத் தொகுப்பு மற்றும் புல்கறணைகள் வழங்கும் திட்டம்.
- ஆவின் பாலகம் அமைக்க மானியம் வழங்கும் திட்டம்.
- கறவை மாடுகள் வாங்க மானியம் வழங்கும் திட்டம்
- தமிழ்நாடு சிமெண்ட் விற்பனை நிலையம் அமைக்க மானியம் வழங்கும் திட்டம்.
- தேசிய பட்டியலினததோர் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் கல்விக் கடன் திட்டம்
- தேசிய துப்புரவுப் பணியாளர்கள நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் பருவக் கடன் திட்டம்

**தூய்மை பணியாளர்கள் நல வாரியம்**

- நலத்திட்ட உதவிகள் வழங்கல்
- தூய்மைப் பணியாளர்களுக்கு 500 வீடுகள் வழங்குதல்
- பெண் தூய்மைப் பணியாளர்களுக்கு தையல் பயிற்சி வழங்குதல்
- சுகாதார அங்காடிகள் அமைத்தல் (Sanitary Mart)



## திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் (Skill Development Training)

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ மாணவியர்களுக்கு தாட்கோ மூலம் பல்வேறு வகையான
திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் 2013-14ம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- HCL நிறுவனத்தில் வேலைவாய்ப்புடன் கூடிய பட்டப்படிப்பு
- Indian Institute of Technology (IIT) மெட்ராஸ் BS (Data Science and Application) பட்டப்படிப்புக்கானப் பயிற்சி
- வங்கி, நிதிச் சேவைகள் மற்றும் காப்பீட்டுத்துறை தொடர்பானப் பயிற்சிகள்
- சென்னை தரமணியில் உள்ள ஒன்றிய அரசால் நடத்தப்படும் ஓட்டல் மேனேஜ்மென்ட் கேட்டரிங் டெக்னாலஜி இன்ஸ்டியூட்டில் பட்டப்படிப்பு
- Medical Coding & Billing பயிற்சி
- ட்ரோன் (Drone) கருவி பயிற்சி
- விமான வாடிக்கையாளர் சேவைப் பயிற்சி
- அழகுக்கலை தொடர்பானப் பயிற்சிகள்
- AMCAT (Aspiring Minds Common Aptitude Test) பயிற்சி
- CAT (Common Admission Test) பயிற்சி
- தகவல் தொழில்நுட்பம் சம்பந்தமானப் பயிற்சி
- Media & Communication பயிற்சி
- மத்திய அரசு பணியாளர் தேர்வாணையத்திற்கான (SSC) பயிற்சி
- வாடிக்கையாளர் சேவை (Customer Executive) பயிற்சி
- உதவி சமையலர் (Assistant Chef) பயிற்சி
- வார்டு பாய் (Ward Boy) பயிற்சி
- மெடிக்கல் ட்ரஸ்ஸர் (Medical Dresser) பயிற்சி







# பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள்

## தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம்
## (Entreprenuer Development Programme Scheme - EDP)

இத்திட்டத்தின் கீழ், 18 வயது முதல் 65 வயது வரை உள்ள தனிநபர் மற்றும் குழுக்கள் தங்கள் பொருளாதார நிலையினை உயர்த்திக்கொள்ளும் பொருட்டு, வருவாய் ஈட்டும் தொழில்கள் புரிந்திட உதவும் வகையில் வங்கிகள் மூலம் மானியத்துடன் கூடியக் கடனுதவிகள் வழங்கப்படுகின்றன.

2021-2022 மற்றும் 2022-2023-ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் **14,823** பயனாளிகளுக்கு **ரூ.220.57 கோடி** மானியம் வழங்கப்பட்டுள்ளது.









“முன்னர் ரூ.20,000 ஆக இருந்த மாத வருமானம் தற்பொழுது ரூ.40,000 ஆக உயர்ந்துள்ளது.”

**திரு. K.P. துரை**
ஏனாத்தூர், வாலாஜாபாத், காஞ்சிபுரம்
தொழில்: அஜய் வெல்டிங் ஒர்க்ஸ்

## வெல்டிங் வேலை, நிறுவனமானது! தொழில் பெருகி நல் வளமானது!

காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத் வட்டாரம், திரு. KP துரை ஆகிய நான், 5 வது வரை படித்துள்ளேன். பல ஆண்டுகளுக்கு முன்பு ஒரு வெல்டிங் கான்ட்ராக்டரிடம் வேலை பார்த்து வந்தேன். எனது பணி நேர்த்தியினால் எனது காண்டிராக்டர் கொடுத்த ஆலோசனையின்படி, ஏனாத்தூரில், சொந்தமாக ‘அஜய் வெல்டிங் ஒர்க்ஸ்’ என்ற நிறுவனத்தைத் தொடங்கி, இருவருக்கு வேலை கொடுத்து, 18 ஆண்டுகளாக நடத்தி வந்தேன். அப்போது எங்கள் பகுதியிலேயே உள்ள L&T நிறுவனத்தின் கட்டுருவாக்கம் (Fabrication) ஒப்பந்தத் தொழில் வாய்ப்பு வந்தது. இதை செய்வதற்கு பெரிய தொகையும், அதை முடிப்பதற்கு 3 – 6 மாதங்கள் வரை பிடிக்கும். இதற்கு எனக்கு தொழில் செயல்பாட்டு நிதி ரூ.5 இலட்சம் வரை வேண்டியிருந்தது. எனது தொழில் நண்பர்கள் மூலம் தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் மானியத்துடன் கூடிய கடன் பெறும் திட்டத்தினை அறிந்து விண்ணப்பித்தேன். ரூ.1.36 இலட்சம் மானியத்துடன் ரூ.5 இலட்சம் கடனுதவி கிடைத்தது. இத்தொகையில் தொழிலை விரிவாக்கி, ஃபேப்ரிகேஷன் பணிகள், வால்வ் ஸ்டேண்ட் போன்றவற்றை தயாரித்து எங்கள் ஊரில் இருக்கும் L&T நிறுவனத்திற்கு வழங்கி வருகின்றேன். தற்போது என்னிடம் ஆறு பேர் வேலை பார்க்கும் நிலையில், என் மாத வருமானம் ரூ. 20 ஆயிரத்திலிருந்து ரூ. 40 ஆயிரமாக உயர்ந்துள்ளது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.



வளமான விடியலில் வளரும் தமிழ்நாடு!





“முன்னர் ரூ. 10,000 வரை வருவாய் ஈட்டி வந்த நாங்கள், தற்போது ரூ. 20,000 வரை வருவாய் ஈட்டி வருகிறோம். குறைந்த வட்டியுடன், மானியமும் கைகொடுத்ததால், இலாபமும் ஈட்டி, எளிதாக EMI –யும் கட்டுகிறோம்.”

**திரு S. கர்ணன்**
வாலாஜாபாத், காஞ்சிபுரம்
தொழில்: பள்ளிப் பைகள் தயாரித்து விற்பனைச் செய்தல்





## சிறிய தையல் தொழிலை, பெரிய வியாபாரமாக மாற்றியுள்ளோம்!

காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத் வட்டாரம், திரு. S. கர்ணன் ஆகிய நான் 7 வது வரை படித்துள்ளேன். 25 ஆண்டுகளாக தையல் தொழில் செய்து வருகிறேன். என் மனைவியும் நானும், ‘ரம்யா பேக்ஸ்’ என்ற பெயரில் கடையைத் தொடங்கி, பள்ளிப் பைகளை விற்பனை செய்து வருகிறோம். இந்த நிலையில் எங்கள் தொழிலை விரிவாக்கி, வருமானத்தை பெருக்க எண்ணினோம். இதற்கு ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேல் தேவைப்பட, யாரிடம் கடன் வாங்குவது என்ற சிந்தனையில் இருந்தோம். ஒரு நல்ல நண்பர், சரியான நேரத்தில் அளித்த தகவலின்படி, தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் மானியத்துடன் கூடிய கடன் திட்டத்தைப் பற்றி அறிந்து விண்ணப்பித்தோம். சில மாதங்களுக்குப் பிறகு இந்தியன் வங்கி வழியாக ரூ. 90,000 மானியத்துடன் கூடிய ரூ. 3.00 இலட்சம் கடனுதவி வழங்கப்பட்டது. பை தைப்பதற்கான மெட்டீரியல் (ஒரு ரோல் ரூ. 15,000 வரை ஆகும்) 10 ரோல் மெட்டீரியல் மற்றும் உபகரணங்களை வாங்கி அதில் பல்வேறு பை வகைகளை (பள்ளிப் பைகள், அலுவலகப் பபைகள், உணவுப் பைகள், மகளிர் பைகள்) தைத்து ஒரு வருட உத்தரவாதத்துடன் விற்பனை செய்கின்றோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.



"பெண்கள் அழகு நிலையம் தொடங்க வேண்டும் என்ற கனவோடு இருந்தேன், தற்பொழுது மாதம் **ரூ.45,000** வரை வருவாய் ஈட்டுகிறேன்."

திருமிகு **A.** பத்மபிரியா
பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை
தொழில்: பெண்கள் அழகு நிலையம்



## கலைநய மகளிருக்கு அழகூட்டுகிறேன், கைத்தொழில் திறனால் மேன்மைப் பார்க்கிறேன்!



சென்னை மாவட்டம், வண்ணாரப்பேட்டை வட்டாரம், திருமிகு A. பத்மபிரியா ஆகிய நான், 10வது வரை படித்துள்ளேன். பெண்கள் அழகு நிலையம் தொடங்க வேண்டும் என்பது எனது இலட்சியம் ஆகும். இதற்கு எனக்கு கடனுதவி தேவைப்பட்டது. தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் மானியத்துடன் கூடிய கடன் பெறும் திட்டத்தினை அறிந்தேன். நம்பிக்கையுடன் விண்ணப்பித்த எனக்கு, ரூ.2,25,000 இலட்சம் மானியத்துடன் ரூ.10 இலட்சம் கடனுதவி கிடைத்தது. அதில் பெண்கள் அழகு நிலையத்தை கட்டமைத்து, அழகு நிலையத்திற்கு வேண்டிய நவீன அழகு சாதனப் பொருட்கள் மற்றும் உபகரணங்களை வாங்கி, அழகு நிலையத்தை நடத்தி வருகின்றேன். எனது அழகு நிலையத்தில் 4 பெண்களுக்கு பயிற்சியும் வேலைவாய்ப்பையும் கொடுத்து வருகின்றேன். என் நிலையத்தின் மூலம் எல்லா செலவுகளும் போக, மாதம் ரூ.45,000 வரை வருமானம் வருகிறது. என் தொழில் மேம்பாட்டில் எனது இலட்சியத்தை எட்டியுள்ளேன் என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.



“தொழில் தொடங்க முயற்சித்த நான் தற்பொழுது ஒரு நிறுவனத்தை நடத்துவதுடன் மாதம் **ரூ.4** இலட்சம் வரை வருவாய் ஈட்டி வருகின்றேன்.”

திரு. ஐயப்பன்
கொக்கிலமேடு, திருக்கழுக்குன்றம்
தொழில்: சலவைத்தொழில்






## ஒரு தொழில் எனக்கு ஊக்கம் தந்தது, அதுவே இன்று வாழ்வில் ஏற்றம் தந்தது!



செங்கல்பட்டு மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டாரம், திரு. ஐயப்பன் ஆகிய நான், (BSC. Fashion Designing) இளங்கலை பட்டம் பயின்றுள்ளேன். சுயமாக தொழில் தொடங்கி ஒரு நிறுவனத்தை நடத்த வேண்டும் என்பது எனது இலட்சியம் ஆகும். எங்கள் ஊரில் ஒருவர் ஆடைகளை சலவை செய்தல் மற்றும் இஸ்த்திரி கடை வைத்திருந்தார். அதிக வேலை இருந்து அவரால் செய்ய முடியவில்லை. எனவே அந்தத் தொழிலில் மனம் ஓடிய எனக்கு அதே தொழிலை பெரிய அளவில் செய்ய திட்டமிட்டேன். இதற்கு எனக்கு ரூ.7 இலட்சம் வரை கடனுதவி தேவைப்பட்டது. எனது நண்பர் ஒருவர் மூலம் தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் மானியத்துடன் கூடிய கடன் திட்டத்தை அறிந்து விண்ணப்பித்தேன். அதன் அடிப்படையில் இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் (SEPY) கீழ், ரூ.2,50,000 திட்ட மானியத்துடன் ரூ.7,50,000 கடனுதவியைப் பெற்றேன். அதில் இயந்திரங்கள் மற்றும் தொழிலுக்கு வேண்டிய தளவாடங்களை வாங்கி, நட்சத்திர ஓட்டல்களுக்கு பல வகையான ஆடைகளை சலவை செய்து கொடுத்து வருகின்றேன் 7 ஊழியர்களுக்கு தங்கும் இடத்துடன் மாதம் ரூ.18,000 வரை ஊதியம் கொடுக்கின்றேன், மாதம் ரூ.4 இலட்சம் வரை வருவாய் கிடைக்கின்றது.



திருமிகு K. ராகவி
திருவல்லிக்கேணி, சென்னை
தொழில்: படத்தொகுப்பு மற்றும் ஒலிப்பதிவு நிலையம்

“மாதம் ரூ.15,000 வருவாய் ஈட்டி வந்த நான் தற்பொழுது ரூ.30,000 வரை வருவாய் ஈட்டுகிறேன்.”





## காணொளி தொகுப்பு நிலையம் தொடங்கி, என் வாழ்வின் இலட்சிய நிலையத்தை அடைந்தேன்!

சென்னை மாவட்டம், திருவல்லிக்கேணி வட்டாரம், திருமிகு K. ராகவி ஆகிய நான் (BSC - Visual Communication) + (DFT - Tech) பயின்றுள்ளேன். என் மடிக்கணினியில் படத்தொகுப்பு செய்து, ஒரு காணொளிக் காட்சிக்கு ரூ.1500 முதல் ரூ.3000 வரை கட்டணம் பெற்று வந்தேன். இதனை மேம்படுத்தி, காணொலி (படக்காட்சி மற்றும் ஒலித் தொகுப்பு) நிலையத்தை (Audio - Video Editing Studio) கட்டமைக்க எண்ணினேன். ஒரு நண்பர் மூலம், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகத்தின், மானியத்துடன் கடன் பெறும் திட்டத்தினை அறிந்துகொண்டு, இணையதளத்தில் பதிவுசெய்து விண்ணப்பித்தேன். என் கோரிக்கை ஏற்கப்பட்டு, கனரா வங்கி மூலம் ரூ.10 இலட்சம் கடனுதவி கிடைத்தது. இதில் ரூ.2,50,000 மானியமாக தாட்கோவால் அறிவிக்கப்பட்டது. வாங்கிய தொகையில் மேக் (MAC) கணினி, ஒலிப்பதிவு & ஒலிக்கலவைக் கருவிகள் வாங்கி, காணொளித் தொகுப்பு நிலையத்தைக் கட்டமைத்தேன். என் சொந்த காணொலி தொகுப்பகத்தில், மாதம் ரூ.30,000 வரை வருவாய் ஈட்டுகிறேன் என்பதையும், இந்த வருவாய் இன்னும் பெருகும் என்பதையும் பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.



“கூலி வேலை செய்துகொண்டிருந்த நான் தற்பொழுது தொழில் முனைவோராக உயர்ந்து, மாதம் ரூ.1 இலட்சம் வருவாய் ஈட்டுகிறேன். கைம்பெண்கள், மாற்றுத்திறனாளர், நலிவுற்ற பெண்களுக்கு வேலைவாய்ப்பு கொடுத்து மகிழ்கிறேன்.”

**திருமிகு T. பவானிமலர்**
காட்டாங்குளத்தூர், திருத்தேரி
தொழில்: கார்மென்ட்ஸ் நிறுவனம்







## சொந்தமாக நிறுவனம் தொடங்கி தொழில் வளம் பெற்றேன், நலிவுற்ற மகளிருக்கு வேலைவாய்ப்பைத் தருகிறேன்!

செங்கல்பட்டு மாவட்டம், காட்டாங்குளத்தூர் வட்டாரம், திருமிகு T. பவானிமலர் ஆகிய நான் 10 வது வரை படித்துள்ளேன். தையல் தொழிலில் 23 ஆண்டுகள் பணியறிவு கொண்டுள்ளேன். கடந்த 16 ஆண்டுகளாக நான் வேலைபார்த்த கார்மென்ட்ஸ் நிறுவனத்தைப் போன்று, சொந்த கார்மென்ட்ஸ் நிறுவனத்தைத் தொடங்க முடிவு செய்தேன். சிறிய கார்மென்ட்ஸ் நிறுவனம் தொடங்கவே ரூ.8 இலட்சம் தொகை வேண்டியிருந்தது, அதற்கு என்ன செய்வதென்று சிந்தித்த போது, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் மானியத்துடன் கூடிய கடன் பெறும் திட்டத்தினை அறிந்தேன். நம்பிக்கையுடன் விண்ணப்பித்த எனக்கு, ரூ.8 இலட்சம் கடனுதவி கிடைத்தது. இதில், ரூ.2.40 இலட்சம் திட்ட மானியமாகக் கழிக்கப்பட்டு, மீதமுள்ள ரூ.5.60 இலட்சம் மட்டுமே கடன் தவணையாக செலுத்தி வருகிறேன். கிடைத்த தொகையில், 10 தையல் இயந்திரங்கள், கட்டிங் மேசைகள், ஓவர்லாக் இயந்திரங்கள் வாங்கி, கடந்த ஏழு ஆண்டுகளாக, 25 பெண்களுக்கு வேலைவாய்ப்பு கொடுத்து, தொழில் தரத்திலும், பொருள் வளத்திலும் பன்மடங்கு மேம்பட்டுள்ளேன் என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.







"ஒரு நிறுவனத்தில் வேலை செய்து வந்த நான் தற்பொழுது ஒரு நிறுவனத்தை சொந்தமாக நடத்தி வருகின்றேன்."

திரு. ராஜா
தாம்பரம், செங்கல்பட்டு
தொழில்: சலவைத்தொழில்



# ஆடைகளை தூய்மையாக்கினேன், அகிலத்திற்கே என்னை காட்டினேன்!





செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் வட்டாரம். திரு. ராஜா ஆகிய நான் (BSC. Computer science) இளங்கலை பட்டம் படித்துள்ளேன். நான் 10 ஆண்டுகளாக ஒரு நிறுவனத்தில் டிரை கிளீனிங் வேலை செய்து வந்தேன். எனக்கு சுயதொழில் தொடங்க வேண்டும் என்பது வாழ்வின் இலட்சியமாகும். நான் வேலை செய்து வந்த நிறுவனத்தில் வேலையை விட்டுவிட்டேன். எனக்கு சொந்தமாகத் தொழில் தொடங்க நிதி தேவைப்பட்டது. தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் மானியத்துடன் கூடிய கடன் வழங்கப்படுவதை கேள்விப்பட்டு விண்ணப்பித்தேன். எனது விண்ணப்பத்தின் அடிப்படையில் ரூ.2,40,000 மானியத்துடன் ரூ.7 இலட்சம் கடனுதவியை வழங்கினார்கள். அதில் இயந்திரங்கள் மற்றும் தளவாடங்களை வாங்கி டிரை கிளீனிங் நிறுவனத்தைத் தொடங்கி நடத்தி வருகின்றேன். கார்ப்பொரேட் நிறுவனங்கள், ஏர் இந்தியா, கத்தார் ஏர்வேஸ், பனகல் மாளிகை போன்ற நிறுவனங்களிடமிந்து ஆடைகளைப் பெற்று டிரை கிளீனிங் செய்து தருகின்றேன். எனது நிறுவனம் மூலமாக 10 ஊழியர்களுக்கு வேலைவாய்ப்பை கொடுத்து வருகின்றேன்.



“முன்னர் மாத வருமானம் ஏதுமில்லை,தற்போது சொந்தத் தொழிலில் மாதம் **ரூ. 50,000** வரை சம்பாதித்து வருகிறேன்.”

திரு. J. ஜெயவேல்
கல்பட்டு, ஊத்துக்கோட்டை, திருவள்ளூர்
தொழில்: ஃபர்னிச்சர் விற்பனை





## வீடுகளுக்கு வசதி கொடுக்கிறேன், வணிகத்தில் உயர்வைப் பார்க்கிறேன்!

திருவள்ளூர் மாவட்டம், கடம்பத்தூர் வட்டாரம், திரு.J. ஜெயவேல் ஆகிய நான், 12வது வரை படித்துள்ளேன். நான் சொந்தமாக வீட்டு உபயோகப் பொருட்களை விற்பனைச் செய்யும் நிறுவனம் தொடங்கி நடத்த வேண்டும் என்று இலட்சியம் கொண்டிருந்தேன். அந்த தொழிலைத் தொடங்க எனக்கு கடனுதவி தேவைப்பட்டது. எனது நண்பர் ஒருவர் மூலம் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் மானியத்துடன் கூடிய கடன் திட்டத்தை அறிந்து விண்ணப்பித்தேன். அதன் அடிப்படையில் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ரூ.2,40,000 மானியத்துடன் ரூ.7,80,000 கடனுதவியை வழங்கினர். அதில் எனது நிறுவனத்திற்கு வேண்டியப் பொருட்களை வாங்கி அனைத்து வகையான வீட்டு உபயோகப் பொருட்களையும் விற்பனைச் செய்து வருகிறேன். இதன் மூலம் எனக்கு அனைத்து செலவுகளும் போக மாதம் ரூ.40,000 முதல் ரூ.50,000 வரை வருவாய் ஈட்டுகிறேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

> நான் சொந்தமாக நிறுவனம் தொடங்க எண்ணினேன், தற்பொழுது நிறுவனத்தின் மூலம் **ரூ.20,000** வரை வருவாய் கிடைக்கின்றது.

**திரு. R. திருமால்**
கொரட்டூர், பூந்தமல்லி, திருவள்ளூர்
தொழில்: ஆயத்த ஆடை தைப்பகம் (கார்மென்ட்ஸ்)





## ஆடை அழகினில் ஆர்வம் கொண்டேன், கார்மென்ட்ஸ் நடத்தி இலட்சியம் வென்றேன்!

திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி வட்டாரம், திரு. R. திருமால் ஆகிய நான், (BSC. Costume designing and fashion designing) பட்டப்படிப்பு படித்துள்ளேன். என் வாழ்வில் நான் ஒரு கார்மென்ட்ஸ் நிறுவனம் நடத்த வேண்டும் என்பது எனது இலட்சியம் ஆகும். அந்த தொழிலைத் தொடங்க எனக்கு கடனுதவி தேவைப்பட்டது. எனது நண்பர் ஒருவர் மூலம் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் மானியத்துடன் கூடிய கடன் திட்டத்தை அறிந்து விண்ணப்பித்தேன். அதன் அடிப்படையில் தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டத்தின் (MSME) கீழ், ரூ.2,25,000 மானியம் மற்றும் நிறுவனக் கட்டுமான நிதி ரூ.2,54,000 சொச்சத்துடன் சேர்த்து 12,71,320 ரூபாய் கடனுதவியை வழங்கினர். அதில் தையல் இயந்திரங்கள், பட்டன் தைக்கும் இயந்திரங்கள் மற்றும் நிறுவனத்திற்கு வேண்டிய இதரப்பொருட்களை வாங்கி நிறுவனத்தைத் தொடங்கி நடத்தி வருகிறேன். இதன் மூலம் எனக்கு அனைத்து செலவுகளும் போக மாதம் ரூ.20,000 வரை வருவாய் ஈட்டுகிறேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.







# நிலம் வாங்கும் திட்டம்

நிலம் வாங்கும் திட்டத்தின் கீழ், 2021-2022 மற்றும் 2022-2023-ஆம் நிதியாண்டில் **63** பயனாளிகளுக்கு **ரூ.2.65 கோடி** மானியம் வழங்கப்பட்டுள்ளது.



"இதற்கு முன் ரூ.15,000 ஆக இருந்த எங்கள் குடும்ப வருமானம் தற்பொழுது ரூ. 24,000 ஆக உயர்ந்துள்ளது"

திருமதி. கல்பனா மணிவாசகம்,
விஷார், காஞ்சிபுரம்
தொழில்: விவசாயம்









## பசுமை நிலம் சொந்தமானது. தாட்கோ நிதியால் கை சேர்ந்தது.

காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் வட்டாரம், திருமதி. கல்பனாவாகிய நான் (BSC, B.Ed.) படித்திருக்கின்றேன். எனக்கு விவசாயத் தொழில் தெரியும், என் பெயரில் சொந்தமாக நிலம் வாங்கி விவசாயம் செய்ய வேண்டும் என்பது எனது இலட்சியம்.

நான் எனக்கான சொந்த நிலத்தை வாங்குவதற்கு தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் மானியத்துடன் கூடிய கடன் பெறும் திட்டத்தினை அறிந்தேன். 'நிலம் வாங்கும் திட்டத்தின்' கீழ், ரூ.1,92,000 கடனுதவியையும், ரூ.3,25,000 மானியத்தையும் பெற்று நான் சொந்த நிலத்தை வாங்கினேன்.

தற்பொழுது அந்த நிலத்தில் நெற்பயிர் செய்து வருகின்றோம். இதுவரை ரூ.15,000 ஆக இருந்த எங்கள் குடும்ப வருமானம் தற்பொழுது எங்கள் சொந்த நில விவசாயத்தின் மூலம் ரூ.24,000 ஆக உயர்ந்துள்ளது. எனது சொந்த நிலத்தின் மூலம் நான் இயற்கை விவசாயம் செய்து தரமான உணவுப்பொருளை விளைவிக்கிறேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.







# பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள்

## இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டம்

இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 2021-2022 மற்றும் 2022-2023-ஆம் நிதியாண்டில் **3,572** பயனாளிகளுக்கு நிதியுதவி மானியமாக **ரூ.63.50 கோடி** வழங்கப்பட்டுள்ளது.









"இதற்கு முன் மாத இலாபம் ரூ.15,000 ஆக இருந்தது, தற்பொழுது ரூ.30,000 ஆக உயர்ந்துள்ளது."

திரு. விக்னேஷ்
மயிலாப்பூர், சென்னை
தொழில்: பேக்கரி பொருட்கள் (அடுமனை)







## நல்ல சுவை நம்பிக்கை தந்தது, மேம்படுத்தினேன் தொழிலும் வளர்ந்தது!

என் பெயர் விக்னேஷ், என்னுடைய வயது 26, நான் சென்னை தரமணியிலுள்ள IHM கல்லூரியில், (BSC in Hospitality and Hotel Administration) பட்டப்படிப்பு படித்துள்ளேன். நான் சொந்த ஆர்வத்தில் சுவையான பேக்கரி உணவுப் பொருட்களைத் தயாரித்து எனது நண்பர்கள் மற்றும் உறவினர்களுக்கு விற்று வந்தேன். நான் தயாரித்த பேக்கரி உணவு வகைகள் அனைவருக்கும் மிகவும் பிடித்துப் போனது. இதில் மாதம் ரூ.15,000 வருவாய் ஈட்டி வந்தேன். நான் சொந்தமாக பேக்கரி கடை தொடங்க இலட்சியம் கொண்டேன். எனக்கு கடனுதவி தேவைப்பட்டது. எனது நண்பரின் மூலம் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் மானியத்துடன் கூடிய கடன் பெறும் திட்டத்தினை அறிந்தேன். 'இளைஞர் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்' (SEPY) கீழ், ரூ.7,25,000 தொழில் கடனும், அதில் ரூ.2,25,000 மானியமும் பெற்று, சென்னை ஆழ்வார்பேட்டையில் எனது அடுமனை (பேக்கிரி) கடையைத் தொடங்கினேன். விற்பனை நல்ல முறையில் நடந்து வரும் எனது கடையில் வாடகை, மூலப்பொருட்கள் செலவு மற்றும் இதர செலவுகள் போக மாதம் ரூ.30,000 வரை இலாபம் ஈட்டுகின்றேன். எனது விருப்பமான தொழில் செயல்பாட்டின் மூலம் வாடிக்கையாளர்களுக்கு தரமான மற்றும் சுவையான பேக்கரி உணவுப் பொருட்களை வழங்கி வருகின்றேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.




"முன்னர் மாதம் ரூ.1.5 இலட்சத்திற்கு நடந்த ஜவுளி வியாபாரம் தற்பொழுது மாதம் ரூ.2.5 இலட்சம் வரை நடக்கிறது."

திரு. சரவணன்
வாலாஜாபாத், காஞ்சிபுரம்
தொழில்: ஜவுளி வியாபாரம்

# சோதனையோட்டமாகத் தொடங்கினேன், பெரிய ஜவுளிக்கடையாக மாற்றி வருகிறேன்!

காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத் வட்டாரம், திரு. சரவணன் ஆகிய நான், (Bachelor of Computer Applications) இளங்கலை முடித்துள்ளேன். எங்கள் வாலாஜாபாத்தில் ஒரு ஜவுளிக்கடையைத் தொடங்கி நடத்தி வந்தேன், அதை பெரிய அளவில் விரிவாக்கம் செய்ய வேண்டும் என்பது எனது இலட்சியம் ஆகும். நான் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் மானியத்துடன் கூடிய கடன் பெறும் திட்டத்தினை அறிந்தேன். தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ரூ.7.5 இலட்சம் வங்கிக் கடனும், அதிகபட்ச மானியமாக ரூ.2,10,000 பெற்று எனது ஜவுளிக்கடை வணிகத்தை விரிவாக்கம் செய்துள்ளேன். இந்த விரிவாக்கத்திற்குப் பிறகு எனது கடையின் வாடிக்கையாளர்கள் எண்ணிக்கையும், வியாபார அளவும் உயர்ந்துள்ளது. முன்பெல்லாம் மாதம் ரூ.1.5 இலட்சத்திற்கு ஜவுளி வியாபாரம் செய்து வந்த நான் தற்பொழுது மாதம் ரூ.2.5 இலட்சம் வரை விற்பனை செய்து வருகின்றேன். இந்த வணிக வளர்ச்சியின் மூலம் எனது வாடிக்கையாளர்களுக்கு தரமான ஜவுளிகளை வழங்குவதுடன், கடையின் வளர்ச்சியையும் பெருக்கி வருகின்றேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.





> “முன்னர் மாதம் **ரூ. 30,000** வரை வருவாய் கிடைத்தது, தற்பொழுது **ரூ. 45,000** வரை வருவாய் கிடைக்கின்றது.”

திரு. V. யுவராஜ்
ஒரகடம், வாலாஜாபாத், காஞ்சிபுரம்
தொழில்: உணவகம் மற்றும் குளிர்பானக்கடை





## நேராநேரத்திற்கு உணவளிக்கிறோம், நேர்மையான முறையில் தொழில் வளர்க்கிறோம்!





காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத் வட்டாரம், திரு. V. யுவராஜ் ஆகிய நான், 10ஆவது வரை படித்துள்ளேன். ஒரு உணவகம் தொடங்கி நடத்துவது எனது இலட்சியம் ஆகும். நான் சில இலட்ச ரூபாய் கடனுதவி வாங்கி தொழிலை நடத்தி வந்தேன். 6 முதல் 8 பேர் அமர்ந்து உண்ணும் அளவில் உணவகம் செயல்பட்டு வந்தது. எனது உணவகத்தை விரிவுபடுத்த எண்ணினேன், அதற்கு எனக்கு கடனுதவி தேவைப்பட்டது. எனது நண்பர் ஒருவர் மூலம் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் மானியத்துடன் கூடிய கடன் திட்டத்தை அறிந்து விண்ணப்பித்தேன். அதன் அடிப்படையில் தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டத்தின் (SEPY) கீழ், ரூ.1.5 இலட்சம் மானியத்துடன் ரூ.5 இலட்சம் கடனுதவியை வழங்கினர். அதில் புதிய மேசைகள், நாற்காலிகள் மற்றும் கப்போர்ட்களை வாங்கினேன். இதுதவிர, எனது உணவகக் கூரை இரும்பு சீட்டால் அமைக்கப்பட்டுள்ளதால், கூரைக்குள்ளே ஃபால் சீலிங் செய்து 15 பேர் அமர்ந்து சாப்பிடும் அளவிற்கு உணவகத்தை விரிவாக்கியுள்ளேன். இந்த விரிவாக்கத்திற்குப் பிறகு எனது உணவகத்தின் மூலம் மாதம் ரூ.45,000 வரை வருவாய் வருகிறது.

" முன்னர் என்னுடைய மாத வருமானம் ரூ. 15,000 ஆக இருந்தது, தற்பொழுது மாதம் ரூ. 40,000 வரை கிடைக்கிறது. "

திரு. M. ஸ்ரீபால்
அவிச்சேரி காலனி, ஊத்துக்கோட்டை
தொழில்: ஆண்கள் அழகு நிலையம்





## ஒரு தொழில் எனக்கு ஊக்கம் தந்தது, அதுவே இன்று வாழ்வில் ஏற்றம் தந்தது!





திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை வட்டாரம், M. ஸ்ரீபால் ஆகிய நான், 12ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். ஒரு தனியார் நிறுவனத்தில் பணி செய்து வந்த நான் சுயமாக ஆண்கள் அழகு நிலையம் தொடங்க திட்டமிட்டேன். அதற்கு எனக்கு கடனுதவி தேவைப்பட்டது. அந்த கடனுதவிக்காக நான் முயற்சித்தபோது எனது நண்பர் ஒருவர் மூலம் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் மானியத்துடன் கூடிய கடன் திட்டத்தை அறிந்து விண்ணப்பித்தேன். தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ரூ.2,25,000 திட்ட மானியத்துடன் ரூ.7,50,000 கடனுதவியைப் பெற்றேன். அதில் கடை வாடகை, சொகுசு நாற்காலிகள் அழகு சாதனப் பொருட்கள் மற்றும் இதர உபகரணங்கள் ஆகியவற்றை வாங்கி ஆண்கள் அழகு நிலையத்தை நடத்தி வருகின்றேன். எனது நிலையத்தில் இருவருக்கு வேலை கொடுத்து வருகிறேன். எனக்கு அனைத்து செலவுகளும் போக மாதம் ரூ.40,000 வரை வருமானம் வருகிறது.



“ முன்னர் மாதம் ரூ.50,000 ஊதியம் வாங்கினேன், தற்போழுது சொந்த தொழிலில் மாதம் ரூ.50,000 இலாபம் ஈட்டுகிறேன். ”

திரு. M. பொன்னரசு
மேல்நால்லாத்தூர், கடம்பத்தூர், திருவள்ளூர்
தொழில்: ஆண்கள் ஜவுளி



## நான் கண்ட ஜவுளி கனவை, நினைவாக்கி வென்றுள்ளேன்!

திருவள்ளூர் மாவட்டம், கடம்பத்தூர் வட்டாரம், திரு. M. பொன்னரசு ஆகிய நான், (Bachelor of Engineering) பட்டப்படிப்பு படித்துள்ளேன். ஒரு நிறுவனத்தில் வேலை செய்து வந்த எனக்கு, சொந்தமாக ஒரு ஆடவர் ஜவுளிக்கடையைத் தொடங்க வேண்டும் என்பது எனது இலட்சியம் ஆகும். அந்த தொழிலைத் தொடங்க எனக்கு கடனுதவி தேவைப்பட்டது. எனது நண்பர் ஒருவர் மூலம் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் மானியத்துடன் கூடிய கடன் திட்டத்தை அறிந்து விண்ணப்பித்தேன். அதன் அடிப்படையில் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ரூ.2,50,000 மானியத்துடன் ரூ.7,50,000 கடனுதவியை வழங்கினர். அதில் எனது ஜவுளிக்கடைக்கான உள் அலங்காரம் மற்றும் ஆடைகளை வாங்கவும் பயன்படுத்திக்கொண்டேன். தரமான ஆடைகளை வழங்கி எனது ஆடவர் ஜவுளிக்கடையை நல்ல முறையில் நடத்தி வருகின்றேன். இதன் மூலம் எனக்கு மாதம் 3 இலட்சம் ரூபாய் வரை ஜவுளி விற்பனை ஆகிறது, அதில் அனைத்து செலவுகளும் போக மாதம் ரூ. 50,000 இலாபம் கிடைக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.









# பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள்

## இளைஞர்களுக்கான மருத்துவம் மற்றும் சுகாதாரம் சார்ந்த சிறப்பு சுய வேலை வாய்ப்புத் திட்டம் (Setting up of Clinic by young Doctors - SEPYC)

இளைஞர்களுக்கான மருத்துவம் மற்றும் சுகாதாரம் சார்ந்த சிறப்பு சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 2021-2022 மற்றும் 2022-2023-ஆம் நிதியாண்டில் **28** பயனாளிகளுக்கு **ரூ.55.41 இலட்சம்** மானியமாக வழங்கப்பட்டுள்ளது









“முன்னர் மாதம் ரூ. 30,000 வரை வருமானம் கிடைத்தது, தற்போது ரூ. 80,000 முதல் ரூபாய் 1 இலட்சம் வரை கிடைக்கிறது”

**திரு. P. சரவணன்**
மாங்காடு, குன்றத்தூர், காஞ்சிபுரம்
தொழில்: கண் பரிசோதனை மற்றும் கண் கண்ணாடி விற்பனையகம்



## கண்களை அக்கறையுடன் காக்கின்றேன், கவனமுடன் மேம்பட்டு வளர்கின்றேன்!

காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் வட்டாரம், திரு. P. சரவணன் ஆகிய நான் (Diploma in Optometry Technology) படித்துள்ளேன். நான் ஓமனில் ஒரு 5 வருடம் மூக்குக் கண்ணாடி விற்பனை நிலையத்தில் பணி செய்து வந்ததேன். சென்னை மாங்காட்டில் சொந்தமாக ‘விமல் விஷன் ஆப்டிக்ஸ்’ என்ற பெயரில் ஆப்டிக்கல் ஸ்டோர் தொடங்கி இயந்திரங்கள் இன்றி கண்களை பரிசோதிக்கும் முறையில் கண்களை பரிசோதித்து, மூக்கு கண்ணாடி விற்பனை செய்து வந்தேன். ஆனால், வரும் வாடிக்கையாளர்கள் அனைவரும் கண்களை பரிசோதிக்கும் இயந்திரம் இல்லையா என கேட்கத் தொடங்கினர். எனவே நான் என் நிலையத்திற்கு கண்களை பரிசோதிக்கும் இயந்திரங்களை வாங்க வேண்டி அவசியம் ஏற்பட்டது, இதற்கு 5 இலட்ச ரூபாய் வரை தேவைப்பட்டது. தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் மானியத்துடன் கூடிய கடன் பெறும் திட்டத்தினை அறிந்து விண்ணப்பித்து, ரூ.5 இலட்சம் கடனுதவியை இந்தியன் வங்கி வழியாக பெற்றுள்ளேன். அதில் கண் பரிசோதனை இயந்திரம் வாங்கி, கண் பரிசோதனை செய்கின்றேன். அந்தக் கடன் தொகையில் 30 சதவீதம் மானியம் தருவதாக தெரிவித்துள்ளனர்.








“பல் மருத்து கிளீனிக் தொடங்க வேண்டும் என்பது எனது கனவாக இருந்தது, தற்பொழுது சொந்தமாகவே தொடங்கி நடத்துவதுடன் மாதம் **ரூ. 30,000** வரை வருவாய் ஈட்டுகிறேன்.”

**திருமிகு D. சங்கீதா**
கும்மிடிப்பூண்டி, திருவள்ளூர்
தொழில்: பல் மருத்துவ கிளீனிக்



## நலம் காக்கும் பல் மருத்துவம் அளிக்கிறேன், நான் விரும்பிய இலட்சியத்தை அடைகிறேன்!





திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டாரம், திருமிகு D. சங்கீதா ஆகிய நான், (BDS. Bachelor of Dental Surgery) மருத்துவப் பட்டப்படிப்பு படித்துள்ளேன். சொந்தமாக பல் மருத்துவ கிளீனிக் தொடங்க வேண்டும் என்பது எனது இலட்சியம். அதற்கு எனக்கு கடனுதவி தேவைப்பட்டது. தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் மானியத்துடன் கூடிய கடன் பெறும் திட்டத்தினை அறிந்து விண்ணப்பித்து, தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ரூ.2 இலட்சம் மானியத்துடன் ரூ.6 இலட்சம் கடனுதவி கிடைத்தது. அதில் பல் மருத்துவ கிளீனிக்கிற்கு வேண்டிய (Patient Chair, Handpiece, Dental Compressor, Suction System, Ultrasonic Scaler, Curing light, Conclusion, X Ray machine, Scanner) போன்ற மருத்துவ உபகரணங்களை வாங்கி எனது பல் மருத்துவ கிளீனிக்கை தொடங்கி நடத்தி வருகின்றேன். எனது கிளீனிக்கிற்கு வரும் பயனாளர்களுக்கு இன்முகத்துடன் நலமான முறையில் சிகிச்சை அளித்து வருவதுடன், எனது பெற்றோர் மற்றும் கணவர் பெருமைப்படும் வகையில் ஒரு தொழில் முனைவோராகவும் சாதித்து வருகிறேன். இந்த கிளீனிக் மூலம் மாதம் ரூ.30,000 வரை வருமானம் ஈட்டுகிறேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.




# பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள்

## தாட்கோ மூலம் கல்விக் கடன் (Education Loan)

ஆதிதிராவிடர் மாணவ, மாணவியருக்கு மருத்துவம், பொறியியல், செவிலியர் போன்ற முழுநேர பட்டப்படிப்பு பயில்வதற்காக குறைந்த வட்டியில் கல்விக் கடன் வழங்கப்பட்டு வருகிறது.

கல்விக் கடன் திட்டத்தின் கீழ் 2021-2022 மற்றும் 2022-2023-ஆம் நிதியாண்டில் **52** மாணாக்கருக்கு **ரூ.1.80 கோடி** நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.




“கல்லூரி படிப்புக்கு நிதியுதவி பெற்றதால் தற்பொழுது நல்ல வேலையில் மாதம் ரூ.18,000 வருமானம் ஈட்டி வருகிறேன்.”

திருமிகு மோகனப்பிரியா
மதுரவாயல், திருவள்ளூர்
தொழில்: நர்சிங்



## கல்வி நிதியுதவியில் பட்டம் பயின்றேன், நல்ல பணியில் தலைநிமிர்ந்து நின்றேன்!

திருவள்ளூர் மாவட்டம், மதுரவாயல் வட்டம், திருமிகு. மோகனப் பிரியாவான நான், (BSC. Nursing) இளங்கலை முடித்து உள்ளேன். பட்டப்படிப்பு படித்து நல்ல வேலையில் சேர்ந்து என் தாய் தந்தைக்கு ஆதரவாக இருக்க வேண்டும் என்பது எனது இலட்சியம். நான் எனது பட்டப்படிப்பிற்காக, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் மானியத்துடன் கூடிய கடன் பெறும் திட்டத்தினை அறிந்தேன். கல்வி உதவி திட்டத்தொகையில் ரூ.1.80 இலட்சத்தில் அதிகபட்ச மானியமாக ரூ.70 ஆயிரம் பெற்று எனது பட்டப்படிப்பை முடித்துள்ளேன். தற்பொழுது ஸ்ரீ லலிதா அம்பிகை கல்லூரி மற்றும் மருத்துவமனையில் பணி செய்து வருகிறேன். எனக்கு மாத வருமானம் ரூ.18,000/- கிடைக்கிறது. அந்த வருவாயில் நான் எனது பெற்றோரை நல்ல முறையில் கவனித்து வருகிறேன் என்பதை பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.









# திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் (Skill Development Training)

## இளைஞர்களுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்குதல் (Skill Development Training Program)

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் / தேசியத் திறன் மேம்பாட்டுக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மூலம் பல்வேறு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின் கீழ் 2021-2022 மற்றும் 2022-2023-ஆம் நிதியாண்டில், **3,435** மாணாக்கருக்கு **ரூ.7.97 கோடி** நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.









"கல்லூரி படிப்பு பெற்று வந்த நான், மடிக்கணினி மற்றும் CAT தொழிற் பயிற்சியைப் பெற்று மேம்பட்டுள்ளேன்."

**திருமிகு P. தனலட்சுமி**
அயனாவரம், சென்னை
கல்வி: CAT Training






## மடிக்கணினியும், மேம்பாட்டுப் பயிற்சியும் பெற்றேன், எதிர்கால உயர்வுக்கு திறனுயர்வுப் பெற்றேன்!

சென்னை மாவட்டம், அயனாவரம் வட்டம், திருமிகு. தனலட்சுமியான நான், (B.COM Accounting and Financing) இளங்கலை 3ஆம் ஆண்டு படித்து வருகிறேன். பட்டப்படிப்பை முடித்து பன்னாட்டு நிறுவனத்தில் நல்ல சம்பளத்தில் வேலை செய்ய வேண்டும் என்பது எனது இலட்சியம். எனது மின்னணு வழி கல்விக்காக, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் மடிக்கணினியை கட்டணமின்றி பெற்றேன். அதே திட்டத்தின் கீழ், எனக்கும் என்னைப்போன்ற மாணவி, மாணவர்களுக்கு இணைய வழியில் (CAT தொழிற் பயிற்சி) வழங்கப்பட்டது. இந்த பயிற்சி எங்களுக்கு ஒரு பன்னாட்டு நிறுவனத்திலோ அல்லது, சுயதொழில் தொடங்கவோ அல்லது மேற்படிப்பை (Master Degree) தொடரவோ மிகவும் உதவியாக இருக்கும். தாட்கோ திட்டத்தின் மூலம் நான் பெற்ற தொழிற் கல்வி மூலம் நான் சாதித்துக் காட்டுவேன் என்பதை பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.



“வருமானம் ஏதுமின்றி இருந்த
நான் தற்பொழுது மாதம் ரூ.25,000
வருமானம் ஈட்டி வருகிறேன்.”

திரு. P. பிரத்தீஸ்
சிட்லப்பாக்கம், தாம்பரம்
தொழில்: டிரோன் ஆப்பரேட்டர்

## கல்வி நிதியில் புதுமையான தொழில் பயின்றேன், பெருமையுடன் தொழில் வல்லுநராக உள்ளேன்!





செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் வட்டம், திரு. பிரத்தீஸான நான் (BE. Mechanical Engineering) இளங்கலை முடித்து உள்ளேன். நல்ல தொழிலை கற்று வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்பது எனது இலட்சியம். எனக்கான தொழிற் பயிற்சியை, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் பெற்றேன். 10 நாட்கள் வழங்கப்பட்ட இந்த தொழிற் பயிற்சியில் டிரோன் அடிப்படை செயல்பாடு, விதிமுறைகள், புகைப்படம் எடுத்தல், இயக்குதல் மற்றும் பழுது பார்த்தல் ஆகியவை 8 நாட்கள் வழங்கப்பட்டன. மீதமுள்ள இரண்டு நாட்களில் திறனை ஆராய்ந்து பயிற்சிக்கான சான்றுகள் வழங்கப்பட்டன. இந்த தொழிற் பயிற்சியில் பயின்ற நான் தற்பொழு ஒரு நிறுவனத்தில் டிரோன் இயக்குபவராக பணியாற்றி வருகிறேன். எனக்கு மாத வருமானம் ரூ.25,000/- கிடைக்கிறது. தாட்கோ திட்டத்தின் மூலம் எனது கனவு நிஜமானது என்பதை பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

# பழங்குடியினர் நலத்துறை

பழங்குடியின மக்களின் நலனுக்கென தனியே பழங்குடியினர் நல இயக்ககம் 01.04.2000 முதல் துவங்கப்பட்டு, 2017 ஆம் ஆண்டு முதல் பழங்குடியினர் நல இயக்ககம் முழு அதிகாரத்தோடு கூடிய தனிப்பொறுப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பழங்குடியின மக்களின் கல்வி அறிவினை முன்னேற்றம் அடையச் செய்ய வேண்டும் என்ற உயரிய நோக்கில் அவர்தம் குடியிருப்புகளுக்கு அருகிலேயே விடுதியுடன் இணைந்த 320 உண்டு உறைவிட பள்ளிகள், 8 ஏகலைவா மாதிரி உண்டு உறைவிட பள்ளிகள் மற்றும் 52 விடுதிகள் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், பழங்குடியின மக்களின் அனைத்து நிலையிலான முன்னேற்றத்தினை குறிக்கோளாக கொண்டு இத்துறையின் மூலம் பல்வேறு சிறப்பான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

- அடிப்படை கட்டமைப்பு மற்றும் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள்
- பழங்குடியினர் மற்றும் பிற மரபு வழியாக வனங்களில் குடியிருப்போர் (வன உரிமைகள் அங்கீகரித்தல்) 2006 சட்டத்தை செயல்படுத்துதல்.
- பழங்குடியினர் வாழும் உட்புறப் பகுதிகளில் பள்ளிகள் துவங்கிட முன்வரும் அரசு சாரா தொண்டு நிறுவனங்களுக்கான நிதியுதவி வழங்கும் திட்டம்.
- பழங்குடியினர் நலவாரியம்

## துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

1. அடிப்படை கட்டமைப்பு மற்றும் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள்
   - விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்
   - ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்
   - பழங்குடியினர் குடியிருப்புகளில் வீடுகள் மற்றும் அடிப்படை வசதிகள் மேம்படுத்தும் திட்டம்.
   - பிரதம மந்திரியின் பழங்குடியினர் முன்மாதிரி கிராமத் திட்டம் (PMAAGY)
   - இந்திய அரசியலமைப்புச் சட்டக்கூறு 275(1)
   - அழிவின் விளிம்பிலுள்ள பண்டைய பழங்குடியினர் (PVTG) மேம்பாட்டுத்திட்டம்
2. பழங்குடியினர் மற்றும் பிற மரபு வழியாக வனங்களில் குடியிருப்போர் (வன உரிமைகள் அங்கீகரித்தல்) 2006 சட்டத்தை செயல்படுத்துதல்.
3. பழங்குடியினர் வாழும் உட்புறப் பகுதிகளில் பள்ளிகள் துவங்கிட முன்வரும் அரசு சாரா தொண்டு நிறுவனங்களுக்கான நிதியுதவி வழங்கும் திட்டம்.
4. பழங்குடியினர் நலவாரியம்

## 12 ஆம் வகுப்பு பொதுத்தேர்வு தேர்ச்சி

- 2022-2023 ஆம் கல்வியாண்டின் 12 ஆம் வகுப்பு பொதுத்தேர்வில், பழங்குடியினர் நலத்துறை பள்ளிகளின் தேர்ச்சி விகிதம் 94.38% ஆகும். இது பள்ளிக்கல்வித் துறையின் தேர்ச்சி விகிதத்தை (89%) விட 5 சதவிகிதம் அதிகமாகும்.
- பழங்குடியினர் நலத்துறை பள்ளிகளின் தேர்ச்சி விகிதமானது மற்ற துறை சார்ந்த பள்ளிகளை விட, இதற்கு முன் எப்போதும் இல்லாத அளவிற்கு 10.2% அதிகரித்துள்ளது.









## Class 12: Tribal schools put on a good show

**EXPRESS NEWS SERVICE** @ Chennai

EIGHT government tribal residential schools in the state have registered 100% pass while 16 other schools out of the 28 have registered over 90% pass in the recent Class 12 examinations.

According to data, 1,245 students from tribal residential schools wrote the exams, of which 1,171 passed, registering a 94.06% pass. Schools that registered 100% results include those located in Sitheri in Dharmapuri, Perumbarai in Dindigul, Maniyarpalayam in Kallakurichi, Vazhavandhinadu in Namakkal, Arunoothumalai in Salem, Kujappanai in The Nilgiris, Topsengaatupatti in Tiruchy and Pattraikaadu in Tiruvannamalai.

The pass percentage of Vazhavanthinadu government tribal residential school has increased by 17.59% from the previous year. Out of the total schools, 15 of them managed to improve their performance.





# 15 TN tribal school kids crack tough JEE (Main)

SUBASHINI VIJAYAKUMAR
@ Chennai

FOR many tribal students in Tamil Nadu, getting good education would mean walking long distances to reach schools or staying away from their families for months in residential schools. Lack of access to internet facilities and mobile network and challenging socio-economic conditions are the other factors that would weigh them down. But overcoming these challenges, 15 students from TN's Eklavya Model Residential School in Chennai

M Boomika

R Hariharan







பழங்குடியினர் நலத்துறை பள்ளிகளில், முதல் முறையாக கடந்த ஆண்டு (2022-2023) நடைபெற்ற JEE முதன்மைத்தேர்வில் 18 மாணவர்கள் தேர்ச்சி பெற்று, 4 மாணாக்கர்கள் திருச்சி NIT கல்வி நிறுவனத்திலும், 1 மாணவி தஞ்சாவூர், NIFT (National Institute of Fashion Technology)-யிலும், 1 மாணவர் NEET நுழைவுத்தேர்வில் தேர்ச்சி பெற்று திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரிக்கு தேர்வு பெற்றுள்ளனர்.






## உயர்கல்வி வழிகாட்டுதல் கருத்தரங்கம்

- மாணாக்கர்களுக்கிடையே உயர்கல்வி குறித்தான விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், 2023-2024 ஆம் கல்வியாண்டின் தொடக்கத்திலேயே, 21.07.2023 அன்று மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் சேலம் மாவட்டத்தில், 12- ஆம் வகுப்பு மாணாக்கர்களுக்கான "தொட்டுவிடும் தூரத்தில் இலக்கு'' என்ற உயர்கல்விக்கான வழிகாட்டுதல் கருத்தரங்கம் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்வில் 1603 மாணாக்கர்கள் மற்றும் 438 ஆசிரியர்கள் என 2041 பேர் கலந்து கொண்டனர்.
- இக்கருத்தரங்கத்தில் NEET, JEE & IIT – உயர்கல்வி நிறுவனங்களில் கல்வி பயில தேர்வாகியுள்ள மாணாக்கர்களுடன் கலந்துரையாடல் நிகழ்வு நடைபெற்றது.
- இந்நிகழ்வின் மூலம், மாணாக்கர்களிடையே உயர்கல்வி குறித்த தெளிவான புரிதல்களுடனான விழிப்புணர்வு அதிகரித்துள்ளதுடன், எதிர்வரும் ஆண்டுகளில் பல்வேறு நிறுவனங்களில் சேர்ந்து உயர்கல்வி பயில்வதற்கான ஆர்வமும் அதிகரித்துள்ளது.



## EMRS பள்ளிகளில் தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் சாதனை







EMRS பள்ளிகளுக்கு இடையேயான தேசிய அளவிலான விளையாட்டு போட்டிகள் கடந்த டிசம்பர் 2022 ஆம் ஆண்டு ஆந்திர மாநிலம், குண்டூரில் நடைபெற்றது. இப்போட்டிகளில், இந்திய அளவில் சத்திஸ்கர் உள்ளிட்ட 8 மாநிலங்களில், 20க்கும் மேற்பட்ட EMRS பள்ளிகள் இருந்த நிலையிலும், தமிழகத்தில் 8 பள்ளிகள் மட்டுமே இருந்தபோதிலும், 10 தங்கம், 13 வெள்ளி மற்றும் 27 வெண்கலப் பதக்கங்களுடன் 50 பதக்கங்களை பெற்று தமிழகம் 5-வது இடத்தை பெற்று சாதனை படைத்தது. வெற்றி பெற்ற மாணாக்கர்கள் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றனர்.





## முதன்முறையாக பழங்குடியினர் நலத்துறை மூலம் நில எடுப்பு திட்டம்

பழங்குடியினர் நலத்துறை தனித்து உருவாக்கப்பட்டதிலிருந்து, முதன்முறையாக வீடற்ற பழங்குடியின மக்களுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா வழங்க நில எடுப்பு செய்யும் திட்டத்தின் கீழ், தஞ்சாவூர் மாவட்டத்தில் தனியார் பேச்சுவார்த்தை மூலம் நிலம் கையகப்படுத்தப்பட்டு 84 இருளர் குடும்பங்களுக்கு ரூ.75.00 இலட்சம் மதிப்பீட்டில் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டு, செந்தமிழ் நகர் என்ற பெயரில் புதிய குடியிருப்புகள் உருவாக்கப்பட்டு வீடுகள் கட்டப்பட்டு வருகிறது.






## விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் (CTDP)

- இத்திட்டத்தின் கீழ் பழங்குடியின மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்திடவும், அடிப்படை வசதிகளை தன்னிறைவு செய்திடவும் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- இத்திட்டத்தின் கீழ் பெறப்பட்ட நிதி மற்றும் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் விவரம் பின்வருமாறு,

| வருடம் | நிதி ஒதுக்கீடு (கோடியில்) | செலவினம் (கோடியில்) | மேற்கொள்ளப்பட்ட பணிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 2020-2021 | 40.95 | 40.95 | 3035 |
| 2021-2022 | 21.82 | 21.82 | 1136 |
| 2022-2023 | 95.69 | 38.07 | 1203 |

- இத்திட்டத்தின் முத்தாய்ப்பாக, அரியலூர் மாவட்டத்தில், ஆண்டிமடம், ஜெயங்கொண்டம், உடையார்பாளையம் சரகங்களில் உள்ள பழங்குடியின இருளர் மக்கள் முந்திரி தோட்டத்தில் முந்திரிக் கொட்டை சேகரம் செய்து கொள்ளும் உரிமைக்கான டெண்டர் / ஏலத்தில் கலந்து கொள்ளாமலேயே முந்திரி மகசூல் ஏல உரிமை வழங்கப்பட்டு, 10 யூனிட்டுக்களுக்கான ஏலத்தொகை ரூ.86.10 இலட்சம் வனத்தோட்ட கழகத்திற்கு இத்துறை மூலம் வழங்கப்பட்டுள்ளது.
- இதன் மூலம் ஆண்டாண்டு காலமாக கூலித் தொழிலாளிகளாக வாழ்ந்து வந்த பழங்குடியின மக்கள் தொழில் முனைவோராக உருவாகி, அவர்களின் வாழ்க்கைத் தரமானது உயர்ந்துள்ளது.







## ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்

வருவாய் வட்டார அளவில் மொத்த மக்கள் தொகையில் 50 விழுக்காடு அல்லது அதற்கு மேல் பழங்குடியின மக்கள் வசிக்கும் சேலம், நாமக்கல், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, திருச்சிராப்பள்ளி, தருமபுரி மற்றும் திருப்பத்தூர் ஆகிய ஏழு மாவட்டங்களில் உள்ள 10 மலைப்பகுதிகள் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் 2022-23 ஆம் ஆண்டில் ரூ.3.23 கோடி செலவினம் மேற்கொள்ளப் பட்டுள்ளது. 2023-2024 ஆம் நிதியாண்டில் ரூ.3.71கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.









## பழங்குடியினர் மக்கள் வாழும் பகுதிகளில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்தும் திட்டம்

பழங்குடியின மக்கள் அதிகம் வசிக்கும் கிராமங்களில், போதுமான அடிப்படை வசதிகள் ஏதும் இன்றி பின்தங்கிய நிலையில், மற்ற மக்களுடன் கலக்காமல் தனித்து இருந்துவந்த நிலையினை மாற்றும் நோக்கில், மாநில அரசு சிறப்பு கவனம் செலுத்தி அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வருகிறது.

உதாரணமாக,

1. 100 ஆண்டுகளுக்கு மேலாக முறையான இணைப்பு சாலை வசதியின்றி தவித்து வந்த வேலூர் மாவட்டம், ஒடுக்கத்தூர் வனப்பகுதியில் பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளான முத்துக்குமரன் மலை முதல் பீஞ்சமந்தை வரை 6.4 கி.மீ நீளத்திற்கு இணைப்பு சாலை அமைக்க 2022-2023 ஆம் நிதியாண்டில், மேற்படி திட்டத்தின் கீழ் ரூ.5.11 கோடி நிதியில் சாலை வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

2. இதே போன்று, திருச்சி மாவட்டம் பச்சமலையில் சோபனாபுரம் முதல் டாப்செங்காட்டுப்பட்டி வரை 11.43 கி.மீ நீளத்திற்கு ரூ.7.43 கோடி நிதியிலும், மூலக்காடு முதல் செம்புளிச்சாம்பட்டி வரை 13.15 கி.மீ நீளத்திற்கு ரூ.1.10 கோடி நிதியிலும் சாலை வசதி ஏற்படுத்தப் பட்டுள்ளது.

இதன் மூலம், இப்பகுதிகளில் போக்குவரத்து வசதி ஏற்படுத்தப்பட்டு பழங்குடியின மக்களின் நீண்டநாள் கனவு நனவாகி, மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கும், வாழ்க்கைத்தர மேம்பாட்டிற்கும் வழிவகுத்துள்ளது.













## அழிவின் விளிம்பிலுள்ள பண்டைய பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் (PVTG)

இத்திட்டங்களின் கீழ் பழங்குடியின மக்கள் வசிக்கும் கிராமங்களுக்கு சாலைவசதி, குடிநீர் வசதி, மின்விளக்குகள் அமைத்தல், கழிவுநீர் கால்வாய்வசதி, இலவச வீடுகள் உள்ளிட்ட அடிப்படை கட்டமைப்பு வசதிகள் மற்றும் பழங்குடியின மக்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் வகையில் இலவச கறவைமாடு, நண்டு வளர்ப்பு, பிளாக் பிரிண்டிங், கோழிப்பண்ணை அமைத்தல், சானிட்டரி நாப்கின் தயாரித்தல், அலங்கார தாவரங்கள் மற்றும் மருத்துவ தாவரங்கள் தோட்டம் அமைத்தல் உள்ளிட்ட பணிகளும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

| வருடம் | நிதி ஒதுக்கீடு (கோடியில்) | செலவினம் (கோடியில்) | மேற்கொள்ளப்பட்ட பணிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 2020-2021 | 5.25 | 5.25 | 553 |
| 2021-2022 | 19.68 | 19.68 | 659 |
| 2022-2023 | 36.31 | 4.21 | 1064 |









## இந்திய அரசியலமைப்பு உட்கூறு 275(1) (Article 275(1))

இத்திட்டத்தின் கீழ், 2020-2021 மற்றும் 2021-2022 ஆண்டுகளில் முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டும் நிதி ஒதுக்கீடு பெறப்படாத நிலையில், 2022-23 ஆம் நிதி ஆண்டில் ரூ.11.46 கோடி முன்மொழிவுகள் ஒன்றிய அரசின் PAC குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு செலவினம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.









## பிரதம மந்திரியின் பழங்குடியினர் கிராம முன்மாதிரித் திட்டம் (PMAAGY)





இத்திட்டத்தின் கீழ், 2021-2022 முதல் 2025 - 2026 வரை 5 ஆண்டுகளுக்கு தமிழகத்தில் உள்ள பழங்குடியினர் அதிகம் வாழும் 167 கிராமங்கள் கண்டறியப்பட்டு, அடிப்படை வசதிகளை தன்னிறைவு செய்திடும் வகையில், ஒரு கிராமத்திற்கு ரூ 20.38 இலட்சம் வழங்கப்படுகிறது.

# ஆதிதிராவிடர் நலத்துறை





## இலவச வீட்டுமனைப்பட்டா வழங்கும் திட்டம்

வீடற்ற ஆதிதிராவிடர் மக்களின் சமூக நிலையினை உயர்த்தும் நோக்கில் அவர்கள் தமக்கென சொந்த வீடு கட்டிக்கொள்ளும் பொருட்டு ஆண்டு வருமானம் ரூ.72,000/-க்கு உட்பட்ட ஆதிதிராவிடர் இனத்தை சேர்ந்த நபர்களுக்கு இலவச வீட்டுமனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஆதிதிராவிடர் நலத்துறை மூலம் இதுவரையில் பட்டா வழங்கப்பெற்ற பயனாளிகளில் ஒப்படை நிலத்தில் வீடுகட்டி குடியிருந்து வரும் நபர்களுக்கு 'தமிழ் நிலம்' இணையதளம் வாயிலாக 2021 ஜூலை மாதம் முதல் e-patta வழங்கப்பட்டு வருகிறது.

மேலும் Housing for all by 2022 திட்டத்தின்கீழ் நிலமற்ற அனைத்து மக்களுக்கும் இலவச வீட்டுமனை வழங்கி PMAY திட்டத்தில் வீடு வழங்கப்படுவதை உறுதிசெய்திட ஏதுவாக 29.09.2021 அன்று உயர் அதிகாரக்குழு அமைத்து ஆணையிடப்பட்டுள்ளது. இதன்படி ஏற்கனவே வழங்கப்பட்ட மனைகளில் வீடுகட்ட வழியின்றி இருக்கும் ஆதிதிராவிடர், பழங்குடியினருக்கு PMAY திட்டத்தின்கீழ் இலவச வீடு வழங்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

| வருடம் | நிதி ஒதுக்கீடு (கோடியில்) | பயனாளிகள் |
|---|---|---|
| 2021-2022 | 6.00 | 709 |
| 2022-2023 | 6.00 | 511 |



திருவள்ளூர் மாவட்டத்தில் ஆதிதிராவிடர் நலத்துறையின் மூலம் ஆதிதிராவிடர் இன மக்களுக்கு இலவச வீட்டுமனை பட்டா வழங்கப்பட்டது.



ஆதிதிராவிட நலத்துறை சார்பில்

**ரூ.1 கோடியே 80 லட்சம் மதிப்பில் இலவச வீட்டு மனை பட்டா**

பொன்னேரி, செப்.12-

திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி தாலுகா ஆரம்பாக்கம் ஊராட்சியில் தோக்கமூர் கிராமம் உள்ளது. இங்கு வசிக்கும் ஆதிதிராவிட பெண்களுக்கு 1 கோடியே 81 லட்சம் மதிப்பிலான 2 ஏக்கர் 94 சென்ட் நிலத்தில் 90 வீட்டு மனைகளாக பிரிக்கப்பட்டு இலவச வீட்டு மனை பட்டா வழங்க மாவட்ட ஆதிதிராவிடர் நலன் மற்றும் பழங்குடியின நலத்துறை முடிவு செய்தது. அதன்படி நேற்று பொன்னேரி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் இலவச வீட்டு மனை பட்டா வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு பொன்னேரி சப்-கலெக்டர் ஐஸ்வர்யா ராமநாதன் தலைமை தாங்கினார். ஆதிதிராவிடர் நலன் மற்றும் பழங்குடியினர் அலுவலர் செல்வராணி, பொன்னேரி சிறப்பு தாசில்தார் சித்ரா ஆகியோர் முன்னிலை வகித்தனர். கும்மிடிப்பூண்டி தாசில்தார் ப்ரீத்தி அனைவரையும் வரவேற்றார்.

கும்மிடிப்பூண்டி எம்.எல்.ஏ கோவிந்தராஜன் சிறப்பு விருந்தினராக பங்கேற்று 90 ஆதிதிராவிட பெண் பயனாளிகளுக்கு இலவச வீட்டு மனை பட்டாக்களை வழங்கி சிறப்புரை ஆற்றினார். இந்நிகழ்ச்சியில் வட்ட வழங்க அலுவலர் ஜெயகர்பிரபு தோக்கமூர் கிராம பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.





## அயோத்தி தாச பண்டிதர் ஆதிதிராவிடர் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டம்

ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் முழுமையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி தரும் நோக்கில் ஆண்டொன்றிற்கு ரூ100 கோடி நிதி ஒதுக்கீட்டில் ஆதிதிராவிடர் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டம் ஆதிதிராவிடர் நலத்துறை மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வந்தது.

இத்திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி, தெருவிளக்கு ,சமுதாய கழிவறை, சாலை வசதி, கழிவு நீர் கால்வாய் வசதி, மயானப்பாதை மற்றும் மயானத்திற்கான அடிப்படை வசதிகள், விளையாட்டு மைதானம், சமுதாயக்கூடம் மற்றும் நூலகம் பழுதுபார்ப்பு ஆகிய பணிகள் செய்யப்பட்டு வந்தன.

2023-2024 ஆம் ஆண்டு முதல் இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு ரூ.200 கோடியாக உயர்த்தப்பட்டு பண்டிதர் அயோத்தி தாசர் பெயரில் இத்திட்டம் செயல்படுத்தப்படும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு இத்திட்டம் இந்த ஆண்டு முதல் ஆதிதிராவிடர் மூலம் செயல்படுத்தப்படுகிறது.

நிதியாண்டில் ஊரக வளர்ச்சி மற்றும் கூடுதல் காவல் துறை இயக்குநர் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் பிரிவு ஆகியவற்றின் மூலம் மாநிலம் முழுவதும் உள்ள 786 ஆதிதிராவிடர் குடியிருப்புகள் கணக்கெடுப்பு செய்யப்பட்டு அவற்றிற்கு தேவையான அடிப்படை வசதிகள்

| நிதியாண்டு | நிதி ஒதுக்கீடு | தேர்ந்தெடுக்கப்பட்ட பணிகளின் எண்ணிக்கை | முடிக்கப்பட்ட பணிகளின் எண்ணிக்கை | நடைபெற்று வரும் பணிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 2021-2022 | ரூ.100 கோடி. | 1577 | 1460 | 117 |
| 2022-2023 | ரூ.100 கோடி. | 1505 | 229 | 1276 |



## சமத்துவ மயானம்

“தமிழ்நாட்டில் பல கிராமங்களில் சாதி வேறுபாடுகளற்ற மயானங்கள் பயன்பாட்டில் உள்ளன. இறுதிப் பயணத்திலும் பிரிவினைகள் இருக்கக் கூடாது என்பதில் மற்றவர்களுக்கு முன்மாதிரியாக விளங்கும் இத்தகைய சிற்றூர்களுக்கு ஊக்கத் தொகையாக வளர்ச்சிப் பணிகளைச் செயல்படுத்த அரசு சார்பில் ரூ.10 இலட்சம் பரிசுத் தொகை வழங்கப்படும்” என மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளுள் விதி எண் 110-இன் கீழ் அறிவிக்கப்பட்டு, சாதி வேறுபாடுகளற்ற மயானங்களை பயன்பாட்டில் கொண்டிருக்கும் கிராமங்களுக்கு பரிசுத்தொகை 2021-2022 முதல் வழங்கப்பட்டு வருகிறது.

இதன்படி 2021 முதல் பரிசு தொகை வழங்கப்பட்ட சாதி வேறுபாடுகள் அற்ற மயானங்கள் கொண்ட கிராமங்களின் விவரம்.

| ஆண்டு | தேர்வு செய்யப்பட்ட சிற்றூர்கள் | ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 2021-2022 | 63 | 110 |
| 2022-2023 | 70 | 110 |
| 2023-2024 | - | 110 |



மேலும் தனியாக மயானங்கள் உள்ள கிராமங்களில் ஆதிதிராவிடர்களுக்காக மயானங்கள் அமைப்பதற்கும், மயானப்பாதை வசதிகள் செய்து தருவதற்கும் வருவாய் துறை மூலம் விரிவான கணக்கெடுப்புகள் செய்யப்பட்டு 237 கிராமங்களில் மயான வசதிகள் செய்து தரவும், 565 கிராமங்களில் மயானப்பாதை வசதி ஏற்படுத்தித் தரவும் நிலஎடுப்பு செய்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.





## இலவச தொழிற்கருவிகள் வழங்கும் திட்டம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு இலவச தொழிற்கருவிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் தையல் தொழிற்பயிற்சி பெற்ற ஆதிதிராவிடர்களுக்கு விலையில்லா தையல் இயந்திரங்களும், சலவை தொழில் செய்யும் தொழிலாளர்களுக்கு விலையில்லா சலவை பெட்டிகளும் (Iron Box) வழங்கப்பட்டு வருகின்றன.

2021-2022 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்ட தொழிற்கருவிகள் விவரம்

| ஆண்டு | தையல் இயந்திரங்கள் | சலவை பெட்டி |
|---|---|---|
| 2021-2022 | 1792 | - |
| 2022-2023 | 1036 | 450 |
| 2023-2024 | - | - |



திருப்பத்தூர் மாவட்டம் ஆதிதிராவிடர் இன மக்களுக்கு மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு துறை அமைச்சர் அவர்களால் இலவச தையல் இயந்திரம் வழங்கப்பட்டது.





## வெளிநாடு சென்று உயர்கல்வி பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டம்

இத்திட்டம் முற்றிலும் மாநில அரசின் கல்வி உதவித்தொகை திட்டமாகும். 2020-2021 ஆம் ஆண்டு வரையில், இத்திட்டத்தின்கீழ் பயன்பெறும் மாணவர்களின் பெற்றோரின் ஆண்டு வருமான வரம்பு ரூ. 3.00 இலட்சம் என இருந்ததால் போதுமான மாணவர்களால் பயனடைய இயலாமல் இருந்து வந்தது.

இத்திட்டத்தினை மறுசீரமைத்து அதிக மாணவர்களை இத்திட்டத்தின்கீழ் ஈர்க்கும்பொருட்டு 2021-2022 ஆம் ஆண்டு நிதிநிலை புதிய அறிவிப்புகளின் கீழ் வெளிநாடு சென்று உயர்கல்வி பெறும் மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகை பெற பெற்றோரின் ஆண்டு வருமான வரம்பு ரூ. 8.00 இலட்சமாக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது.

மேலும் 2023-24 ஆம் ஆண்டு முதல் அதிக மாணாக்கர்கள் பயன்பெறும் வகையில் இத்திட்டத்தின் கீழ் ஆண்டு வருமான வரம்பு ரூ. 12.00 இலட்சமாக உயர்த்தி பின்வருமாறு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

| வருமான வரம்பு | அதிகபட்ச கல்வி உதவித் தொகை |
|---|---|
| ஆண்டுக்கு ரூ.8.00 இலட்சம் வரை | ரூ. 36.00 இலட்சம் |
| ஆண்டுக்கு ரூ. 8.00 இலட்சம் முதல் ரூ. 12.00 இலட்சம் வரை | ரூ. 24.00 இலட்சம் |

இதன் மூலம் 2021-2022 ஆம் ஆண்டு 9 மாணவர்களும், 2022-2023 ஆம் ஆண்டு 9 மாணவர்களும் ஆக 18 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு இங்கிலாந்து, இத்தாலி, தென்கொரியா, அமெரிக்கா, நெதர்லாந்து, கனடா, ஜெர்மனி, அயர்லாந்து போன்ற அயல்நாடுகளில் உயர்கல்வி பயில கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.







## வெளிநாடு சென்று பயிலும் மாணவர்



| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. சுஜித் செல்வன் |
| தந்தை பெயர் | : | திரு. P. செல்வன் |
| ஆண்டு வருமானம் | : | ரூ.72,000/- |
| வகுப்பு | : | இந்து, அருந்ததியர் |
| இருப்பிடம் | : | சேலம் மாவட்டம் |
| அடிப்படை கல்வி | : | B.E (ECE), Muthayammal Engineering College, Namakkal. |
| தற்போது வெளிநாட்டில் பயிலும் கல்வி நிறுவனம் மற்றும் படிப்பு | : | Master of Engineering Management University of Leicester, England |
| கல்வி உதவித் தொகை | : | ஆண்டுக்கு ரூ. 28.62 இலட்சம் |






## வெளிநாடு சென்று பயிலும் மாணவி



| | | |
|---|---|---|
| பெயர் | : | செல்வி. ம. நிவேதிதா |
| தந்தை பெயர் | : | திரு. P. மணிகண்டன் |
| ஆண்டு வருமானம் | : | ரூ.84,000/- |
| வகுப்பு | : | இந்து, ஆதிதிராவிடர் |
| இருப்பிடம் | : | சென்னை மாவட்டம் |
| அடிப்படை கல்வி | : | M.Sc (Applied Geology), |
| தற்போது வெளிநாட்டில் பயிலும் கல்வி நிறுவனம் மற்றும் படிப்பு | : | M.Sc (Coastal Hazards, Risks, Climate Change Impacts and adaptation), IHE DELFT, The Netherlands |
| கல்வி உதவித் தொகை | : | ஆண்டுக்கு ரூ. 30.00 இலட்சம் |





## முழுநேர முனைவர் பட்டம் பயிலும் மாணவி



| | | |
|---|---|---|
| பெயர் | : | து. ஸ்டெல்லா மேரி |
| தந்தை பெயர் | : | திரு. த. துரைக்கண்ணு |
| ஆண்டு வருமானம் | : | ரூ.96,000/- |
| வகுப்பு | : | கிறித்தவ - ஆதிதிராவிடர் |
| இருப்பிடம் | : | சென்னை மாவட்டம் |
| பயிலும் கல்வி நிறுவனம் மற்றும் படிப்பு | : | Ph.D, சென்னை பல்கலைக்கழகம், சென்னை |
| கல்வி உதவித் தொகை | : | ஆண்டுக்கு ரூ. 1.00 இலட்சம் |

## முழுநேர முனைவர் பட்டம் பயிலும் மாணவி



| | | |
|---|---|---|
| பெயர் | : | திருநங்கை. நா. ஜென்சி |
| தந்தை பெயர் | : | திரு நாகூர் |
| ஆண்டு வருமானம் | : | ரூ.84,000/- |
| வகுப்பு | : | இந்து, ஆதிதிராவிடர் |
| இருப்பிடம் | : | திருவள்ளூர் மாவட்டம் |
| பயிலும் கல்வி நிறுவனம் மற்றும் படிப்பு | : | Ph. D, Madras University |
| கல்வி உதவித் தொகை | : | ஆண்டுக்கு ரூ. 1.00 இலட்சம் |









## முழுநேர முனைவர் பட்டப்படிப்பு பயிலும் ஆதிதிராவிடர், பழங்குடியின மற்றும் மதம் மாறிய கிறித்தவ ஆதிதிராவிடர் மாணாக்கர்களுக்கான ஊக்கத் தொகைத் திட்டம்.

இத்திட்டம் முற்றிலும் மாநில அரசின் கல்வி உதவித்தொகை திட்டமாகும். 2020-2021 ஆம் ஆண்டு வரையில் இத்திட்டத்தின்கீழ் ஆண்டுக்கு ரூ.50,000/ ஊக்கத் தொகை வழங்கப்பட்டு வந்தது. பயன்பெறும் மாணவர்களின் பெற்றோரின் ஆண்டு வருமான வரம்பு ரூ. 2.50 இலட்சமாக இருந்தது மேலும் கிறித்தவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணக்கர்கள் பயனடைய இயலாமலும் இருந்து வந்தது.

இத்திட்டத்தினை மறுசீரமைத்து அதிக மாணவர்களை இத்திட்டத்தின் கீழ் ஈர்க்கும் பொருட்டு 2021-2022 ஆம் ஆண்டு முதல் பெற்றோரின் ஆண்டு வருமான வரம்பு ரூ. 8.00 இலட்சமாக உயர்த்தப்பட்டதுடன் கிறித்தவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணாக்கர்களும் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டனர்.

மேலும், மாணாக்கர்களுக்கு வழங்கப்படும் ஊக்கத்தொகை ரூ.50,000/ யிலிருந்து ரூ. 1.00 இலட்சமாக உயர்த்தப்பட்டது.

| ஆண்டு | மாணாக்கர்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட உதவித்தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 2021-2022 | 1185 | 11.85 |
| 2022-2023 | 1564 | 15.64 |
| 2023-2024 | ஆன்லைன் மூலம் திட்டத்தினை செயல்படுத்த நடவடிக்கையில் உள்ளது | |

### முழுநேர முனைவர் பட்டம் பயிலும் மாணவி



| | | |
|---|---|---|
| பெயர் | : | அ. ஆன் கிறிஸ்டிலா பிரியதர்சினி |
| தந்தை பெயர் | : | திரு. அ. அந்தோணி |
| ஆண்டு வருமானம் | : | ரூ. 60,000/- |
| வகுப்பு | : | கிருத்துவ - ஆதிதிராவிடர் |
| இருப்பிடம் | : | கடலூர் மாவட்டம் |
| பயிலும் கல்வி நிறுவனம் மற்றும் படிப்பு | : | Ph.D, பாரதியார் பல்கலைக்கழகம், கோவை |
| கல்வி உதவித் தொகை | : | ஆண்டுக்கு ரூ. 1.00 இலட்சம் |







## முழுநேர முனைவர் பட்டம் பயிலும் மாணவர்



| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. அ. கமலசேகர் |
| தந்தை பெயர் | : | திரு. அ. அரப்புளி |
| ஆண்டு வருமானம் | : | ரூ. 84,000/- |
| வகுப்பு | : | பழங்குடியினர் - (இந்து மலையாளி) |
| இருப்பிடம் | : | நாமக்கல் மாவட்டம் |
| பயிலும் கல்வி நிறுவனம் மற்றும் படிப்பு | : | Ph.D, பெரியார் பல்கலைக்கழகம், சேலம் |
| கல்வி உதவித் தொகை | : | ஆண்டுக்கு ரூ. 1.00 இலட்சம் |





## ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தினை நடைமுறைப்படுத்துதல்

ஆதிதிராவிடர் / பழங்குடியினர் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தினை நடைமுறைப் படுத்துவதிலும், பாதிக்கப்பட்ட நபர்களுக்கு மறுவாழ்வு நடவடிக்கைகளிலும் தமிழக அரசு முனைப்புடன் செயலாற்றி வருகிறது.

வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழக்கின் தன்மைக்கேற்றவாறு. ரூ. 85,000/-லிருந்து ரூ. 8,25,000/- வரை தற்போது வழங்கப்பட்டு வரும் தீருதவித் தொகை, இனி குறைந்தபட்சமாக ரூ. 1.00 இலட்சமாகவும், அதிகபட்சமாக ரூ. 12.00 இலட்சமாகவும் மாநில அரசு நிதி மூலம் உயர்த்தி வழங்கப்படும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் பேரவை விதி எண்: 110-ன்கீழ் அறிவிக்கப்பட்டு 2021-2022 ஆம் ஆண்டு முதல் உதவித்தொகைகள் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

### வழங்கப்பட்ட மொத்த தீருதவித் தொகை விவரம்

| ஆண்டு | வழங்கப்பட்ட தீருதவித்தொகை (ரூபாய் கோடியில்) | மாநில அரசின் கருணைத் தொகை (ரூபாய் கோடியில்) | பயனடைந்தவர்கள் |
|---|---|---|---|
| 2021-2022 | 29.98 | 15.00 | 3241 |
| 2022-2023 | 31.00 | 25.93 | 2404 |





## வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட நபர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்திற்கு வழங்கப்படும் மறுவாழ்வு திட்டம்

சாதிய வன்கொடுமைகளால் பாதிக்கப்பட்டு மரணமடைந்த குடும்பத்தில் உள்ள நபர்களுக்கு ஒருங்கிணைந்த மறுவாழ்வுத்திட்டத்தின்கீழ் குடும்பத்தில் ஒரு நபருக்கு வேலைவாய்ப்பு, ஓய்வூதியம். விவசாய நிலம் வீட்டுமனை, அவர்களின் குழந்தைகளுக்கு பட்டப்படிப்பு வரை கல்வி பயில்வித்தல் போன்ற மறுவாழ்வுத் திட்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

| ஆண்டு | வேலைவாய்ப்பு | ஓய்வூதியம் | வீட்டுமனைப் பட்டா | கல்வி உதவித்தொகை |
|---|---|---|---|---|
| ஜுன் 2021 முதல் நாளது தேதி வரை | 117 | 71 | 62 | 41 |



28.08.2023 அன்று மதுரை மாவட்டத்தில் வன்கொடுமையால் பாதிக்கப்பட்டு உயிர் இழந்த குடும்ப உறுப்பினர்களில் ஒருவருக்கு அரசு பணி என்பதற்கிணங்க 11 நபர்களுக்கு மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் அரசு பணிக்கான ஆணை வழங்கப்பட்டது



சேலம் மாவட்டம் 1.9.2023 வன்கொடுமையால் பாதிக்கப்பட்டு இறந்த குடும்பங்களின் வாரிசுதாரர் மூன்று நபர்களுக்கு இளநிலை உதவியாளராக மாவட்ட ஆட்சியர் அவர்களால் பணி நியமன ஆணை வழங்கபட்டது





## ஆதிதிராவிடர் காலனிகளில் சமுதாயக் கூடங்கள் கட்டுதல்

ஆதிதிராவிடர் மக்கள் தங்கள் இல்ல சுப நிகழ்ச்சிகளை சிறப்பாக நடத்தும்பொருட்டு ஆண்டுதோறும் சமுதாயக் கூடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

2021-2022 ஆம் ஆண்டு முதல் கட்டப்படும் சமுதாயக் கூடங்கள் அனைத்து வசதிகளுடன் கூடிய நவீன சமுதாயக்கூடங்களாக கட்டுவதற்கு ஒரு சமுதாயக் கூடத்திற்கான நிதியொதுக்கீடு ரூ. 60.00 இலட்சத்திலிருந்து ரூ. 1.20 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. உயர்த்தப்பட்ட நிதியொதுக்கீட்டுடன் 2021-2022 ஆம் ஆண்டு மாநிலம் முழுவதும் 20 சமுதாயக் கூடங்கள் கட்டுவதற்கு ஆணையிடப்பட்டு கட்டுமானப்பணிகள் தாட்கோ மூலம் நடைபெற்று வருகின்றன.

| ஆண்டு | சமுதாயக் கூடங்களின் எண்ணிக்கை | மதிப்பீடு |
|---|---|---|
| 2021-2022 | 20 | ரூ. 24.00 கோடி |
| 2022-2023 | - | - |






கரூர், பெரம்பலூர் மற்றும்தர்மபுரி மாவட்டங்களில் ஆதிதிராவிடர் நலத்துறையின் மூலம் ஆதிதிராவிடர் இன மக்களுக்காக கட்டி முடிக்கப்பட்ட சமுதாயக் கூடங்கள்





## புதிரை வண்ணார் நல வாரியம்

சலவைத் தொழில் செய்யும் புதிரை வண்ணார் இன தொழிலாளர்களின் சமூக, கல்வி மற்றும் பொருளாதார மேம்பாட்டினை உறுதிசெய்ய மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்களை தலைவராகக் கொண்டு தமிழ்நாடு புதிரை வண்ணார் நல வாரியம் 2009 ஆம் ஆண்டு துவங்கப்பட்டது.

இவ்வாரியத்தில் தற்போது 1880 சலவை தொழில் செய்யும் புதிரை வண்ணார் இன குடும்பங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு புதிரை வண்ணார் நல வாரியம் மற்றும் பழங்குடியினர் நல வாரியம் ஆகிய வாரியங்களின்கீழ் பதிவுசெய்துள்ள உறுப்பினர்களுக்கும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் இதுவரை வழங்கப்பட்டு வந்த இயற்கை மரண உதவித்தொகை, கல்வி உதவித்தொகை திருமண உதவித்தொகை, முதியோர் ஓய்வூதியம் மற்றும் ஈமச்சடங்கு உதவித்தொகை ஆகிய நலத்திட்ட உதவிகள் இதர நல வாரியங்களால் வழங்கப்பட்டு வரும் உதவித்தொகைக்கு இணையாக உயர்த்தி வழங்கப்படும் என 2022-2023 ஆம் ஆண்டு வரவு – செலவு கூட்டத் தொடரில் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டதற்கிணங்க அனைத்து நலத்திட்ட உதவித் தொகைகளும் உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது. இதற்காக கூடுதலாக ரூ.40.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேலும் 2023-24 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட உரையில் புதிரை வண்ணார்கள் நல வாரியத்திற்கு புத்துயிர் அளித்து வாழ்வாதார மேம்பாட்டு நடவடிக்கைகள் நலப் பணிகளை மேற்கொள்ள ரூ.10.00 கோடி வழங்கப்பட்டுள்ளது.





## ஆதிதிராவிடர் நல பள்ளிகளுக்கான திட்டங்கள்

ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் 833 ஆரம்பப் பள்ளிகளும், 99 நடுநிலைப் பள்ளிகளும், 108 உயர்நிலைப் பள்ளிகளும் மற்றும் 98 மேல்நிலைப் பள்ளிகளும் ஆக மொத்தம் 1138 பள்ளிகள் இயங்கி வருகின்றன. இவற்றில் 87729 மாணாக்கர்கள் பயின்று வருகின்றனர். இத்துறை பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணாக்கர்களுக்கும் பள்ளிக் கல்வித்துறையில் வழங்கப்படுவது போல் விலையில்லா பாடப்புத்தகங்கள், குறிப்பேடுகள், சீருடைகள் உள்ளிட்ட அனைத்து கல்வி உபகரணங்களும் இத்துறை பள்ளி மாணவர்களுக்கும் வழங்கப்படுகின்றன.

இதை தவிர இத்துறை பள்ளிகளில் 10 மற்றும் 12-ம் வகுப்பு பயிலும் மாணவர்களின் தேர்ச்சி விகிதம் மற்றும் மதிப்பெண்களை உயர்த்தும் நோக்கத்தில் அனைத்து பாடங்களுக்கும் ஆண்டுதோறும் சிறப்பு வழிகாட்டி (Special Guide) நூல்கள் மற்றும் வினா வங்கி தொகுப்பு அச்சிடப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன.

ஆதிதிராவிடர் நலத்துறை பள்ளிகளில் 10 மற்றும் 12 ம் வகுப்பு பயிலும் மாணாக்கர்களை கல்வி சுற்றுலா அழைத்து செல்ல பள்ளி ஒன்றிற்கு ரூ.25,000/- வீதம் வழங்கப்படுகிறது.

மேலும், ஆதிதிராவிடர் நலத் துறை மேல்நிலைப்பள்ளியில் பதினொன்றாம் வகுப்பு பயிலும் மாணாக்கர்களுக்கு ஆண்டுதோறும் இலவச மிதிவண்டி வழங்கப்பட்டு வருகிறது.



மீனம்பாக்கம் ஆதிதிராவிடர் நல மேல்நிலைப்பள்ளி மாணவருக்கு மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு துறை அமைச்சர் அவர்களால் மிதிவண்டி வழங்கப்பட்டது.



மௌலிவாக்கம் ஆதிதிராவிடர் நல மேல்நிலைப்பள்ளி மாணவிக்கு மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு துறை அமைச்சர் அவர்களால் மிதிவண்டி வழங்கப்பட்டது.






## பிரதம மந்திரி முன்னோடி கிராம திட்டம் (PMAGY)



40 சதவீதத்திற்கு மேல் ஆதிதிராவிடர் மக்கள் வசிக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களின் ஒருங்கிணைந்த வளர்ச்சியை உறுதி செய்வதே இந்த திட்டத்தின் முக்கிய நோக்கம் ஆகும். பிரதம மந்திரி முன்னோடி கிராம திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்ட கிராமங்களின் குடிநீர், கல்வி, சுகாதாரம், விவசாய நடைமுறைகள், தூய்மையான எரிபொருள், மின்சாரம், வாழ்வாதாரம் மற்றும் திறன் மேம்பாடு, டிஜிட்டல் மயமாக்கம், நிதி சேர்க்கை ஆகிய அடிப்படை வசதிகளை மேம்படுத்திட ஒன்றிய அரசால் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டு ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து முகமைகள் மூலம் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

471 கிராமங்கள் முன்னோடி கிராமங்களாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், 1342 கிராமங்களில் திட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



விருதுநகர் மாவட்டம் திருவில்லிபுத்தூர் ஒன்றியத்தில் PMAGY திட்டத்தின் கீழ் செய்யப்பட்ட குடிநீர், சாலை மற்றும் கழிவறைகள் பணிகள்






## பாபு ஜெகஜீவன்ராம் விடுதி கட்டிடம் கட்டும் திட்டம்

ஒன்றிய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் மூலம் பாபு ஜெகஜீவன்ராம் சத்ரவாஸ் யோஜனா என்ற திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர் நலத்துறையில் புதிய மாணவ மாணவியர் விடுதி கட்டிடம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு வழங்கப்படுகிறது. மாணவியர் விடுதி கட்டிடம் கட்டுவதற்கு 100 விழுக்காடு பங்களிப்புடனும், மாணவர் விடுதி கட்டிடம் கட்டுவதற்கு 50 விழுக்காடு பங்களிப்புடனும் இத்திட்டம் செயல்பட்டு வருகிறது.

மேற்படி திட்டத்தின் மூலம் 2003-2004 முதல் 2008-2009 ஆம் ஆண்டு வரை 208 விடுதிகளுக்கு புதிய கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. தற்போது மேற்படி திட்டத்தின் கீழ் 2019-2020 மற்றும் 2021-2022 ஆம் ஆண்டிற்கான 13 விடுதிகளுக்கு 2 விடுதிகளில் கட்டுமானப் பணி முடிவுற்று பிற விடுதிகளுக்கு கட்டுமான பணி நடைபெற்று வருகிறது.



**BJRCY HOSTEL**
**ADW LAW COLLEGE BOYS HOSTEL, SALEM DISTRICT**



**SC Boys Hostel (BJRCY) 50 Students at Gummidipoondi in Tiruvallur District Estimate Amount - Rs.1.07 Crore**











## கல்விச்சுற்றுலா

தமிழ்நாட்டில் உள்ள இயற்கை வளங்கள், பறவைகள், விலங்குகள் சரணாலயங்கள் போன்றவற்றையும் நமது நாட்டின் வரலாற்றினை அறிந்து கொள்ளும் வகையில் வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களைக் கண்டுகளிக்கும் பொருட்டும் நமது நாடு சுதந்திரம் பெற கடந்து வந்த பாதைகளையும், வெற்றி சரித்திரங்களை அறியும் பொருட்டும், தமிழ்நாட்டின் பாரம்பரியம், பண்பாட்டையும் நமது தொன்மையை புரிந்து கொள்ளும் வகையில் பள்ளி மாணாக்கர்களை கல்விச்சுற்றுலா அழைத்துச்செல்வது அவசியம் எனக்கருதி 2014-15 ஆம் ஆண்டு முதல் ஆதிதிராவிடர் உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு கல்விச்சுற்றுலா அழைத்துச் செல்ல மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் மூலம் பள்ளி ஒன்றுக்கு ரூ.25,000/- வீதம் அந்தந்த பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.
















## சாரண / சாரணியர் இயக்கம்

தோழமை உணர்வு மேம்படவும், நற்சிந்தனைகள் வளரவும், சமுதாயத்துடன் ஒருங்கிணைந்து செயல்படும் எண்ணம் உருவாகவும் அவசியம் கருதி ஆதிதிராவிடர் உயர் / மேல்நிலைப்பள்ளிகளில் சாரண சாரணியர் இயக்கம் துவங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்காக ஒரு பள்ளிக்கு ரூ. 55,000/- வீதம் 2014 - 2015 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது





நாமக்கல் மாவட்டம் அ.பாலப்பட்டி ஆதிந உயர்நிலைப்பள்ளி சாரண/சாரணியர் இயக்கம்








## ஆதிதிராவிடர் நல விடுதிகளுக்கான திட்டங்கள்



ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் 1141 பள்ளி விடுதிகளும் மற்றும் 190 கல்லூரி விடுதிகளும் ஆக மொத்தம் 1331 விடுதிகள் இயங்கி வருகின்றன. இவற்றில் 837 மாணவர்கள் விடுதிகள் மற்றும் 494 மாணவியர் விடுதிகள் ஆகும். இவ்விடுதிகளில் சுமார் 75,000 மாணாக்கர்கள் தங்கி கல்வி பயின்று வருகின்றனர்.

தமிழகத்தின் பல்வேறு ஊர்களில் இருந்து வந்து சென்னை மாநகரில் உள்ள உயர் கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணாக்கர்களின் நலனுக்காக அனைத்து வசதிகளுடன் கூடிய நவீன கல்லூரி விடுதி சைதாப்பேட்டை எம்.சி. ராஜா வளாகத்தில் ரூ.44.50 கோடியில் கட்டப்படும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு கட்டுமானப்பணிகள் 12.07.2023 அன்று துவங்கி வைக்கப்பட்டது.



சென்னை தவிர பிற நகரங்களான மதுரை, கோவை, திருச்சி மற்றும் நீலகிரி ஆகிய நகரங்களிலும் ரூ. 100.00 கோடி மதிப்பில் நவீன வசதிகளுடன் கூடிய விடுதிகள் கட்டப்படும் என 2023-2024 வரவு செலவு திட்ட உரையில் அறிவிக்கப்பட்டு அதற்கான பணிகள் துவங்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இதை தவிர விடுதிகளில் தங்கி கல்வி பயிலும் மாணாக்கர்களுக்கு ஆண்டு தோறும்

1. விளையாட்டு உபகரணங்கள்
2. நூலக புத்தகங்கள்
3. பாய் மற்றும் போர்வைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

நடப்பு ஆண்டு (2023-2024) புதிய அறிவிப்புகளின் கீழ் விடுதிகளில் தங்கி 10 மற்றும் 12-ஆம் வகுப்பு பயிலும் மாணாக்கர்களுக்கு ரூ.1.00 கோடி செலவில் உயர்கல்வி வழிகாட்டுதல் மற்றும் சிறப்பு பயிற்சி வழங்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேலும், விடுதி மாணாக்கர்களுக்கு ரூ.10.00 கோடி செலவில் கற்றல் மற்றும் கற்பித்தல் அறைகள் கட்டப்படும் என்ற புதிய அறிவிப்புகளின் கீழ் 20 விடுதிகளில் அனைத்து வசதிகளுடன் கூடிய கற்றல் அறைகள் கட்டப்பட்டு வருகின்றன.



28.8.2023 அன்று பெரம்பலூர் மாவட்டத்திற்கு வருகை புரிந்த இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு துறை அமைச்சர் அவர்கள் பெரம்பலூர் ஆதிந பள்ளி மாணவர் விடுதியை திடீராய்வு மேற்கொண்டார். அப்பொழுது மாணவர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க விளையாட்டு உபகரணங்களை வாங்கி வழங்கி மாணவர்களுக்கு வாழ்த்து தெரிவித்தார்.